‘திராவிட மாடல் பாதையே சரியானது!’ - ஆளுங்கட்சிக்கு குட்டு வைத்த நீதிமன்றம்

திராவிட நாயகர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடந்த ஐந்தாண்டு கால திராவிட மாடல் ஆட்சி என்பது பல்வேறு துறைகளிலும் தமிழ்நாட்டில் ஒரு புதிய அளவுகோலை (பெஞ்ச்மார்க்) வகுத்தளித்துள்ளது. ஒருங்கிணைந்த - பரவலாக்கப்பட்ட - அனைவருக்கும் அனைத்தும் என்ற இலட்சியத்துடன் திராவிட முன்னேற்றக் கழக அரசு போட்டுள்ள பாதையை எவரும் மீற முடியாது என்பதை, தட்டுத் தடுமாறும் த.வெ.க. அரசின் போலி விளம்பரங்கள் மெய்ப்பிக்கின்றன.

நடிகர் விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் நிறைவடைகின்றன. இனியும் தேனிலவுக் காலம் என்று சொல்லி மக்களை ஏமாற்ற முடியாது. தேனிலவு - பால்நிலவு எல்லாம் அகலும் புறமுமாக முடிந்துவிட்டது. அதை விஜய் தரப்பினரும் உணர்ந்திருப்பதால்தான், ஆட்சிக்கு வந்து என்னச் செய்தீர்கள் என்ற மக்களின் கேள்விக்கு நேரடியாகப் பதில் அளிக்க முடியாமல் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்கள் மீது ஸ்டிக்கர் ஒட்டும் வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள்.

100 நாள்களில் 1 இலட்சம் கோடி தொழில் முதலீடு என்பதுதான் அவர்களின் லேட்டஸ்ட் ஸ்டிக்கர். 2021-26 திராவிட மாடல் ஆட்சியில் 12இலட்சத்து 54ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள 1190 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, அதன் மூலமாக 36இலட்சத்து 6 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 60%க்கு மேல் செயல்பாட்டுக்கு வந்தன. 2024ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் ஒப்பந்தம் போட்ட வியட்நாம் நாட்டின் புகழ்பெற்ற வின்ஃபாஸ்ட் நிறுவனம் ஒன்றரை ஆண்டுக்குள்ளாகத் தூத்துக்குடி மாவட்டத்தில் தனது உற்பத்தியைத் தொடங்கியதுடன், அதே மாவட்டத்தைச் சேர்ந்த 200 பேருக்கு வேலைவாய்ப்பையும் அளித்தது. இத்தகைய சாதனை முயற்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியதுதான் திராவிட மாடல் அரசு.

உலகின் முன்னணி நிறுவனங்கள் பலவும் திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் முதலீடு செய்வதற்கு ஆர்வம் காட்டின. தி.மு.க.வின் 5 ஆண்டுகால ஆட்சியில் முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவில் 3வது இடத்தில் இருந்த தமிழ்நாடு, த.வெ.க ஆட்சி அமைந்த பிறகு 16வது இடத்திற்குப் பின்தங்கிவிட்டது. நிர்வாகத் திறனற்ற முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் கேலிக்கூத்தான செயல்பாடுகள், ரீல்ஸ்கள், மோசமான அணுகுமுறைகள் - இவைதான் இந்த வீழ்ச்சிக்குக் காரணமாகும். இதனை மறைப்பதற்காக திடுதிப்பென ஒரு முதலீட்டாளர் மாநாட்டை, ஆகஸ்ட் 13 அன்று ஏற்பாடு செய்து, அதில் 1 இலட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்ததாக விஜய் அரசு விளம்பரத் தம்பட்டம் அடித்தது.

உண்மையில், த.வெ.க ஆட்சியால் ஈர்க்கப்பட்ட முதலீடுகள் என்பவை வெறும் 30% கூட இல்லை. போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலீடாக மாறுமா என்பதற்கும் உத்தர வாதமில்லை. 70% முதலீடுகள் கடந்த திராவிட மாடல் ஆட்சியில் போடப்பட்ட வலுவான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வழியே ஈர்க்கப்பட்டவைதான் என்பதை ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியிருக்கிறார், கழக ஆட்சியில் தொழில் துறை அமைச்சராக இருந்த அன்புச் சகோதரர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா.

மிகத் தெளிவான புள்ளிவிவரங்கள் வெளிப்பட்டுள்ளன. இதன் மூலம், திராவிட மாடல் ஆட்சியில் போடப்பட்ட பாதையில்தான் தொழில்துறை முதலீடுகளை த.வெ.க. அரசு ஈர்க்கிறது என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

தி.மு.க. ஆட்சி மீது பழிசுமத்தி பெயர் வாங்கலாம் என்றுதான் த.வெ.க அரசு திட்டமிட்டது. அதைச் செயல்படுத்த, அறநிலையத்துறையைப் பயன்படுத்த நினைத்தது. கோயில் சொத்துகள் கோயிலுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்று த.வெ.க. வின் அறநிலையத்துறை அமைச்சரான 100 கோடி பழனி கோயில் நில ஊழல் புகழ் **‘முறுக்கு’ ரமேஷ்** தெரிவித்தார். அதாவது, திராவிட மாடல் ஆட்சியில் அறநிலையத்துறை சார்பில் அரசு கலைஅறிவியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் த.வெ.க அமைச்சரின் கருத்து வெளிப்பட்டது.

அறநிலையத்துறை சார்பில் கல்லூரிகள் தொடங்குவது என்பது இப்போது த.வெ.க கூட்டணி அமைச்சரவையில் பங்கேற்றுள்ள காங்கிரஸ், தமிழ்நாட்டில் ஆட்சி செய்த காலத்திலிருந்தே நடைமுறையில் உள்ளது. குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி, பழனி யாண்டவர் கலைக் கல்லூரி ஆகியவை பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தபோது தொடங்கப்பட்டவை. அ.தி.மு.க ஆட்சிக்காலத்திலும் அறநிலையத்துறை சார்பில் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. ஏற்கனவே தொடங்கப்பட்ட கல்லூரிகள் விரிவாக்கம் செய்யப்பட்டன. எனினும், பா.ஜ.க. பாணியில், அதன் ‘பி டீமான’ த.வெ.க. அரசு திராவிட மாடல் ஆட்சியை மட்டுமே குறிவைத்துப் பழி சுமத்தியது. அறநிலையத்துறை சார்பில் திட்டமிடப்பட்டிருந்த கல்லூரிகளுக்கு எதிராகச் செயல்பட்டது.

கோவி.லெனின்
தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

இந்நிலையில், **அறநிலையத்துறை சார்பில் கல்லூரிகள் தொடங்கப்படுவதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த, நீதிபதிகள் ஜெயச்சந்திரன்மனோகரன் அடங்கிய அமர்வு, “கோயில் நிதியைக் கல்விக்காகப் பயன்படுத்தலாம்” என உத்தரவிட்டது. திராவிட இயக்கத்தின் முதல் அரசியல் அமைப்பான நீதிக்கட்சி ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திருக்கோயில்கள் தொடர்பான அறநிலையச் சட்டத்தின் நோக்கத்தை உயர்நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. இதன் மூலம், திராவிட மாடல் பயணிக்கும் பாதை சரியானது என்பதை த.வெ.க அரசுக்கு குட்டு வைத்து உணர்த்தியுள்ளது நீதிமன்றம்.**

மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைக்கின்ற நீட் தேர்வைத் தொடக்கம் முதலே எதிர்த்து வருகின்ற இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். நேரடிக் களத்திலும், சட்டப் போராட்டங்கள் வழியாகவும் ‘நீட்’ எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தி.மு.க தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. ஆட்சி செய்யும் வாய்ப்பை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் வழங்கியபோது, சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன், நீட் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்குக் கோரும் சட்ட முன்வரைவை நிறைவேற்றி, ஆளுநருக்கு அனுப்பி வைத்தார். ஆனாலும், ஒன்றிய வஞ்சக பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டு மக்கள் பிரதிநிதிகளின் ஒட்டுமொத்த உணர்வைப் புறக்கணித்து, தமிழ் மாணவர்களுக்குப் பெரும் துரோகத்தை இழைத்தது.

இந்தத் துரோகத்தைக் கண்டித்து தி.மு.க. பல போராட்டங்களை நடத்தியது. **துணை முதலமைச்சர் பொறுப்பை வகித்த கழகத்தின் இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தன் பதவிப் பற்றித் துளியும் கவலைப்படாமல் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்று, ஆளுநரின் மக்கள் விரோதச் செயலைக் கண்டித்து உரையாற்றினார். இதுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.**

தி.மு.க.வின் தாய்க்கழகமான திராவிடர் கழகம், நீட் தேர்வைத் தொடர்ந்து எதிர்த்துப் பரப்புரை செய்து வருகிறது. திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி அவர்கள் ‘திராவிட மாடல்’ ஆட்சியில் தமிழ்நாடு தழுவிய நீட் எதிர்ப்புப் பரப்புரைப் பயணத்தை மேற்கொண்டு, மக்களிடம் விழிப்புணர்வூட்டினார். அந்தப் பயணத்தின் நிறைவு நிகழ்வில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று, தந்தை பெரியாரைப் போல வயது பற்றிக் கவலைப்படாமல் பொதுத் தொண்டாற்றி வரும் ஆசிரியன் அரும் பணியை வாழ்த்தினார்.

தந்தை பெரியாரை தனது கொள்கைத் தலைவர் என்று லேபிள் ஒட்டியிருக்கும் த.வெ.க.வின் ஆட்சியில், நீட் தேர்வுக்கு எதிராக தமிழ்நாடு தழுவிய அளவில் திராவிடர் கழகம் மேற்கொள்ளவிருந்த வாகனப் பரப்புரைக்கு, விஜய் அரசு கடைசி நேரத்தில் தடை போட்டதுடன், கொள்கைத் தலைவராக பெரியார் பெயரிலான திடலில் போலீஸ் படையைக் குவித்து, தன்னைப் ‘பா.ஜ.க.வின் பி டீம்’ என்று நிரூபித்திருக்கிறது. தடைக்கு எதிராக திராவிடர் கழகத்தின் சார்பில் அதன் துணைத்தலைவர் கவிஞர் கலி.பூங்குன்றன் அவர்கள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த **நீதிபதி லட்சுமிநாராயணன் அவர்கள், “கருத்துரிமை, பேச்சுரிமை போல போராடுவதும் அடிப்படை உரிமை. நீட் தேர்வுக்கு எதிராக இருசக்கர வாகனப் பேரணியை முடக்குவது ஏன்? ஹெலிகாப்டரில் சென்று போராட முடியுமா?” என்று கேட்டதுடன், காவல்துறை உரிய பதிலளிக்க உத்தரவிட்டுள்ளார்.**

நீட் தேர்வு எதிர்ப்பு என்பது தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த உணர்வு. நீட் தேர்வை ஆதரிப்பது பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் சங்கிக் கூட்டமே. அந்தக் கூட்டத்தில் ஒருவர்தான் என்று த.வெ.க தன்னை அடையாளப்படுத்தியுள்ளது. ஆர்.எஸ்.எஸ். பின்னணி கொண்ட நிர்மல்குமார், அருண்ராஜ் போன்றவர்கள் த.வெ.க.வில் சேர்ந்ததும், அவர்கள் அமைச்சர்களாகியிருப்பதும் எதேச்சையானது அல்ல. இது திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் செயல்முறையாகும்.

பெரியார், அண்ணா என்று த.வெ.க.வினர் உதட்டளவில் பேசினாலும் அவர்கள் ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க. செயல்திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் போட்டிருக்கும் வேடம்தான் அது என்பது அறநிலையத்துறை சார்பில் கட்டப்படும் கல்லூரிகளுக்கு எதிரான நிலைப்பாடும், நீட் தேர்வை எதிர்க்கும் திராவிடர் கழகத்தின் பரப்புரை மற்றும் இளம் தலைமுறையின் போராட்டம் ஆகியவற்றை போலீஸ் படையைக் கொண்டு முடக்கும் நடவடிக்கைகள் மூலமாகவும் வெட்ட வெளிச்சமாகிவிட்டது.

ஆர்.எஸ்.எஸ்., எஸ்பா.ஜ.க. நோக்கங்களை நிறைவேற்றும் பசுத்தோல் போர்த்திய புலிதான் விஜய் நடத்தும் த.வெ.க. எனும் நாடகக் கம்பெனி. அந்தப் புலிக்குப் பல்லும் பிடுங்கப்பட்டு விட்டது. நகமும் வெட்டப்பட்டுவிட்டது.

திராவிட மாடல் ஆட்சியில் முடிக்கப்பட்ட திட்டங்கள் தான்

த.வெ.க. ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்களாகப் போடப்பட்டுள்ளன!

முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா விளக்கம்!

சென்னை, ஆக.15- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் பேச்சு வார்த்தைகள் நடத்தி முடிக்கப்பட்ட திட்டங்களுக்குத்தான், தவெக ஆட்சியில் நேற்று முன்தினம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன என்று முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் விரிவாக குறிப்பிட்டுள்ளார்.

தவெக அரசு நடத்திய முதலீட்டாளர்கள் கூட்டம் தொடர்பாக திமுக முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

75% MoU கள் திமுக ஆட்சியில் தயார் செய்தவை

இந்த 100 நாட்கள்ல பெரிய புதிய திட்டங்கள் ஏன் வர வில்லை?

வளர்ச்சிக்கு முக்கியமான பரந்தூர், ஒசூர் விமான நிலையங்கள் அமைப்பதில் இந்த அரசின் முடிவு என்ன.?

நம்பர் 1 :

இந்த Conclave விற்கு ஊடகங்களை ஏன் அனுமதிக்க வில்லை.? ஏன் இவ்வளவு Secrecy? ஏன். இதுல வர திட்டங்கள் எல்லாமே சென்ற திராவிட மாடல் ஆட்சில நாங்க ரெடி பண்ணினது தான் என்பது ஊடகங்களுக்கு தெரிஞ்சிடும் என்ற எண்ணமா.? எது

வாக இருந்தாலும் முதலீடுகளை ஈர்க்கவும் அதை Promotion செய்யவும் Press மிக முக்கியமான ஒன்று.

நம்பர் 2 :

இதுல வந்த MOU-ஸ்களில் கிட்டத்தட்ட ஒரு 75% திராவிட மாடல் ஆட்சில ரெடி பண்ணி வச்சிருந்த அந்த திட்டங்கள்தான் அப்படின்னு எல்லாருக்கும் தெரியுது. அது உங்களுக்கும் தெரியும்னு நினைக்கிறேன்.

நம்பர் 3:

நம்ம “Bullish on TN” லோகோவே மாத்திருக்கீங்கன்னு சொல்றாங்க. எல்லாத்துலயும் ஸ்டிக்கர் ஒட்ட தேவையில்ல. இதெல்லாம் வந்து நாங்க மார்க்கெட் பண்ணி. இவ்ளோ தூரம் Project செய்து, Publicity கொண்டு வந்து வச்சிருக்கோம் . அத நம்ம அப்படியே தொடர்ச்சியா நம்ம தமிழ்நாட்டுக்கு யூஸ் பண்றதுல என்ன தவறுன்னு எனக்கு தெரியல.

அதுல ஒன்னும் திமுக பிராண்டிங்எல்லாம் ஒன்றும் நாங்க ஒட்டல. அது தமிழ்நாட்டுக்கான பிராண்டிங். அந்த தமிழ்நாட்டோட பிராண்டிங்க திருப்பி ரீபிராண்ட் (Re-brand) பண்ணி, திருப்பி ரீ-ஸ்டார்ட் (Re-start) பண்ண வைக்கா தீங்க. இத்தனை நாள் செய்திருக்கும் அந்த பணிய யூட்டிலைஸ் (Utilize) பண்ணிக் கோங்க. அது அடுத்த கட்டத்துக்கு தமிழ்நாட்ட உயர்த்துறதுக்கு உதவியா இருக்கும்.

நம்பர் 4:

ஆந்திர பிரதேஷ் CM சந்திரபாபு நாயுடு அவர்கள் கடந்த சில நாட்களுக்கு முன்பு State Investment Promotion Bureau மீட்டிங்க அவரே நடத்தினார். அதுல ரெண்டு லட்சம் கோடி ரூபாய்க்கான திட்டங்களை கிளியர் பண்றாரு.

ஆனா இங்க இன்னும் சென்ற திமுக ஆட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடத்தப்பட்டு முடிக்கப்பட்ட அந்த திட்டங்களோட MOU-ஸ் மட்டும்தான் இன்னைக்கு நீங்க சைன் பண்றீங்க. அதுதான் Predominantly சைன் பண்றீங்க அப்படின்னு சொல்றாங்க. கிட்டத்தட்ட 75% of those MOUs signed today are from... or an outcome of the DMK regime's good work அப்படின்னு சொல்றாங்களே...

அப்போ புதிய திட்டங்கள் ஏன் வரல? இந்த 100 நாட்கள்ல ஏன் பெரிய புதிய திட்டங்கள் இன்னும் வரல?

நம்பர் 5:

ரொம்ப முக்கியமான ஒன்று Infrastructure. இவ்வளோ திட்டங்களும் இங்க வரணும். இன்னும் பெரிய திட்டங்கள்லாம் இங்க வரணும்னா, இன்வெஸ்ட்மென்ட் ரேஸ்ல நமக்கு இன்ஃப்ராஸ்ட்ரக்சர் ரொம்ப ரொம்ப முக்கியம். ஓசூர் அண்ட் பரந்தூர் ஏர்போர்ட்ஸ் very very critical for Tamil Nadu's industrial growth. இதுல இன்றைய ஆட்சியாளருக்கு என்ன ஸ்டாண்ட் (Stand)என்றது கிளாரிட்டி இன்னும் வரல.

எனவே, திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி காலத்துல தமிழ்நாடு பெற்றிருந்த அந்த வளர்ச்சி தொடர வேண்டுமென்றால், Investment promotion நாம இன்னும் கவனம் செலுத்தணும். நிச்சயமாக மிகப்பெரிய அளவுல புதிய நிறுவனங்கள், புதிய வெளிநாட்டு முதலீடுகள் நம்ம தமிழ்நாட்டுக்கு புதிய இடங்களில் வருவதை நாம் உறுதி செய்வது மிக மிக அவசியம். தற்போதைய முதலமைச்சர் இதுல நிச்சயமாக கவனம் செலுத்தணும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கோவையில் - படுகொலை செய்யப்பட்ட

மாணவனின் குடும்பத்திற்கு தி.மு.க. சார்பில் ரூ.2 லட்சம் நிதிஉதவி!

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் நேரில் ஆறுதல்!

கள்ளக்குறிச்சி, ஆக.15- கோவை தனியார் பொறியியல் கல்லூரியில் போதைப்பொருள் விற்றது தொடர்பான தகவல்களை தந்ததால் அடித்து கொலை செய்யப்பட்ட அமுதனின் வீட்டுக்கு கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் நேற்று முன்தினம் ஆகஸ்ட் 13 வியாழக்கிழமை அன்று நிர்வாகிகளுடன் வீடு தேடி சென்று ரூ.2 லட்சம் நிதி உதவி வழங்கி ஆறுதல் கூறினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், வடக்கனந்தல் பேரூராட்சிக்கு உட்பட்ட அம்பேத்கர் நகர் பகுதியை சேர்ந்தவர் கென்னடி, இவர் அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார், இவருடைய மனைவி சுமதி, இவர்களுக்கு சார்லஸ், அமுதன் என்ற இரு மகன்கள் உள்ளனர், இதில் அமுதன் கோவையில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார். இந்த நிலையில் ஆகஸ்ட் 10 அன்று கோவையில் சில மாணவர்கள் ஒன்று சேர்ந்து அமுதன்மீது கொலை வெறி தாக்குதல் நடத்தியதில் அவர் இறந்து விட்டார், இறந்து போன மாணவன் அமுதனின் உடல் கடந்த புதன்கிழமை அன்று சொந்த ஊரான வடக்கனந்தல் பகுதியில் அடக்கம் செய்யப்பட்டது, இந்த மாணவனின் இறப்புக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று சட்ட சபையில் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்,

இந்த நிலையில் இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின், தமிழ் நாடு எதிர்க்கட்சித் தலைவர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் அமைச்சர், கொறடா எ.வ.வேலு ஆகியோரின் உத்தரவின் பேரில், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தா.உதயசூரியன் நிர்வாகிகளுடன் நேரில் சென்று அமுதனின் பெற்றோருக்கு ஆறுதல் கூறி தி.மு.க. சார்பில் ரூ.2 லட்சம் நிவாரணத் தொகையையும் வழங்கியதுடன் இரண்டாவது மகனின் முழு கல்வி செலவையும் ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து குடும்பத்திற்கு வேண்டிய உதவிகளையும் தி.மு.க. செய்யும் என்றும் உறுதி கூறினார்.

அப்பொழுது அவரிடம் பெற்றோர்கள் தனது மகனின் இறப்புக்கு தக்க நீதி கிடைக்க வேண்டும் அதற்கு உதயநிதி சார் உதவிட வேண்டும் அவரால் மட்டும் தான் அது முடியும் என்று கண்ணீருடன் வேண்டுகோளையும் வைத்தனர். இந்த நிகழ்வின் போது வடக்கனந்தல் பேரூராட்சி மன்ற தலைவர் பன்னீர்செல்வம், மாநில மகளிர் அணி துணை செயலாளர் அங்கையற்கண்ணி, சின்னசேலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அன்பு மணி மாறன், பேரூர் கழக செயலாளர் ஜெயவேல் உள்ளிட்ட நிர்வாகிகள் தொண்டர்கள் பலர் உடனிருந்தனர்.

கோவை பொறியியல் கல்லூரியில் போதைப்பொருள் விற்றது தொடர்பான தகவல்களைத் தந்ததால் அடித்துக் கொலை செய்யப்பட்ட அமுதனின் வீட்டுக்கு, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், சங்கராபுரம் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் நிர்வாகிகளுடன் நேரில் சென்று அமுதனின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறி, ரூ.2 லட்சம் நிவாரணத் தொகை வழங்கியதுடன், அவரது இரண்டாவது மகனின் முழு கல்விச் செலவையும் ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து குடும்பத்திற்குத் தேவையான உதவிகளையும் தி.மு.கழகம் செய்யும் என்றும் உறுதியளித்தார். அப்போது அங்கையற்கண்ணி, பன்னீர்செல்வம், அன்பு மணிமாறன், ஜெயவேல், ஆகியோர் உடன் இருந்தனர்.

விடுமுறை அறிவிப்பு

சுதந்திர தினத்தையொட்டி இன்று (15.08.2026 –சனிக்கிழமை) முரசொலி அலுவலகத்திற்கு விடுமுறை. முரசொலியின் அடுத்த இதழ் நாளை மறுநாள் (17.08.2026 – திங்கட்கிழமை) வழக்கம் போல் வெளிவரும்.

தலைமை நிர்வாகி
முரசொலி

முதலீட்டாளர்கள் மாநாட்டில் —

பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுப்பு!

த.வெ.க. அரசுக்கு – சென்னை பத்திரிகையாளர் மன்றம் கடும் கண்டனம்!

சென்னை, ஆக.15- முதலீட்டாளர்கள் மாநாட்டில், பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு, சென்னை பத்திரிகையாளர் மன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது.

சென்னை பத்திரிகையாளர் மன்றம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், (GFX) அண்மையில் நடைபெற்ற முதமைச்சர் கலந்து கொண்ட அனைத்து நிகழ்வுகளிலும் இதேபோல் பத்திரிகையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சென்னை பத்திரிகையாளர் மன்றம், அரசு நடத்தும் நிகழ்வில் பத்திரிகையாளர்களுக்கு ஒட்டுமொத்தமாக அனுமதி மறுக்கப்படுவது இது வரை எந்த ஆட்சியிலும் நடைபெறாத நிகழ்வு எனத் தெரிவித்துள்ளது. மக்கள் வரிப்பணத்தில் அரசு நடத்தும் நிகழ்ச்சி களில் பத்திரிகையாளருக்கு அனுமதி மறுக்கப்படுவது பத்திரிகை சுதந்திரத்தை ஒடுக்கும் செயல் எனவும் தெரிவித்துள்ள சென்னை பத்திரிகையாளர் மன்றம், அரசு நிகழ்வுகள் குறித்து நாங்கள் கொடுப்பதை மட்டும் செய்தியாக வெளியிட வேண்டும் என்று கூறுவது செய்திகளை அரசு தணிக்கை செய்வதற்கு சமம் எனக் கூறியுள்ளது.

அரசின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் வகையில், அனைத்து அரசு நிகழ்வுகளுக்கும் பத்திரிகையாளர்களை அனுமதிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.